# இணைப்பு 2.7

## 29.12.98 மற்றும் 30.12.98 ஆகிய நாட்களில் தருமபுரி மாவட்டம் ஒக்கேனக்கலில் நடைபெற்ற உயர்நிலைக்குழுவின் ஏழாவது கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் கூடுதலாக வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் ஏழாவது கூட்டம் 29.12.98 மற்றும் 30.12.98 ஆகிய நாட்களில் தருமபுரி மாவட்டம் ஒக்கேனக்கலில் நடைபெற்றது. இதில் குழுவின் அறிக்கையினை இறுதி செய்யும் பொருட்டு வரைவு அறிக்கை பரிசீலினைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. குழுவின் அமைப்பாளராகிய மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை) அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

2. இக்கூட்டத்தில் கீழ்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர், | தி.மு.க. |
| 2.திரு.பரமத்தி சண்முகம் | தி.மு.க. |
| 3.திரு.என்.ஆர்.அழகர்ராஜா, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 4.திரு.எம்.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் | இ.தே.லீக். |
| 5.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 6.திரு.ஏ.எம்.கோபு | இந்திய கம்யூனிஸ்ட் |
| 7.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |

திரு.அழகிரி மற்றும் பேராசிரியர் தீரன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலா விட்டாலும் தங்கள் மேலான கருத்துக்களை எழுத்து மூலமாக தெரிவித்திருந்தனர்.

3.கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றுகையில் உறுப்பினர்கள் முதல் ஆறு கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களின்அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கையில் திருத்தங்கள் மற்றும் புதிய கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றினை தெரிவிக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இதை தொடர்ந்து வரைவு அறிக்கை ஒவ்வொரு பகுதிகளாக விவாத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த விவாதத்தில் கீழ்கண்ட திருத்தங்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் வரைவு அறிக்கையில் உரிய மாற்றங்கள் செய்ய முடிவு செய்யப்பட்டது.

## இயல்II

### பொதுவான பரிந்துரைகள்

3(அ).கிராமசபை

அரசின் தற்போதைய அறிவுரைப்படி வருடம் நான்குமுறை கிராமசபை நடத்தப்பட வேண்டும் என்ற விவரத்தை சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

3(ஆ) கிராமசபை ஊராட்சியில்-

(1).கூடுதலாக ஏற்பட்டுள்ள பொறுப்புக்களை சமாளிக்க ஊராட்சிகள் பெரிய மற்றும் இதர ஊராட்சிகளாக வகைப்படுத்தி நிதி வசதியுள்ள பெரிய ஊராட்சிகள் அவசியமென கருதினால் அரசு நிர்ணயிக்கும் தகுதிக்கேற்ப பகுதி நேர ஊழியர்களை முழு நேர பணியாளர்களாக நியமிக்கவும் ஒரே கல்வி தகுதி இருப்பின்பணி மூப்பு அடிப்படையில் அளிக்கவும், தகுதியான நபர்கள் இல்லாதபோது அரசு ஆணைக்குட்பட்டு புதிய நபர்கள் நியமித்து கொள்ளவும் அனுமதிக்க குழு பரிந்துரைக்கிறது.

(2). வரிசை எண்.6ல்' ஊராட்சி தலைவர் கட்டுப்பாட்டில்' என்பதற்கு பதிலாக 'ஊராட்சி மன்ற கட்டுப்பாட்டில் என்றும் ' அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு 'ஊராட்சி தலைவருக்கு இருக்க வேண்டும்' என்பதற்கு பதிலாக ஊராட்சி நிர்வாக அலுவலருக்கு இருக்கவேண்டும் என்றும் திருத்தம் செய்யலாம்.

(3). வரிசை எண்.9ல் வீட்டு இணைப்புகளுக்கு திரும்ப செலுத்த தேவையில்லாத ஒரு தவணையிலான இணைப்பு தொகையும் கணிசமான மாதாந்திர தண்ணீர் தீர்வையும், வீட்டு இணைப்பு இல்லாதவர்களுக்கு மாதம் ரூபாய் 10க்கு குறையாமல் தண்ணீர் தீர்வை விதிக்கவும் இப்பரிந்துரைகளில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

(4). வரிசை எண்.12ல் பி மெமோ, டி மெமோ, 2சி பட்டா மற்றும் மரம் சம்பந்தப்பட்ட இதர தாக்கீதுகள் என்று சேர்க்கலாம்.

(5). வரிசை எண்.13ல் ' வீடு இல்லை என்ற அறிக்கை பெற்ற பிறகுதான்' என்பதனை மாற்றி 'வீடு இல்லை என்று உறுதிபடுத்திய பிறகு என்று' திருத்தம் செய்யலாம்.

(6). வரிசை எண்.21ஐ வரிசை எண்.17க்கு பிறகு 18ஆக சேர்க்கலாம். அதை தொடர்ந்து கீழ்கண்ட பொருட்களையும் சேர்க்கலாம்.

அ. தொழில் வரி சட்டவிதிகளின்படி மத்திய அரசு அலுவலர்கள் உள்பட அனைத்துப் பொருளீட்டும் நபர்கள் மீதும் விடுதல் இன்றி வசூலிக்க வழிவகை செய்ய வேண்டும்.

ஆ. கணிமம் மீதான சன்மானவரி (Royalty) கிராம ஊராட்சிகளுக்கு ஒரு பகுதியை அரசு பிரித்து தர குழு பரிந்துரைக்கிறது.

இ. நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளது போல் குடிநீர் மற்றும் வடிகால் வரி விதிப்பதுபோல் ஊராட்சிகளிலும் வீட்டு வரி தொகை மீது 20%க்கு மிகாமல் குடிநீர் வரி விதிக்க பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்க குழு பரிந்துரைக்கிறது. அரசு ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரைக்கிறது.

உ. நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளதுபோல் கிராம புறங்களில் விளம்பர வரி விதிக்க பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் வழங்கவும் அதற்குரிய சட்ட திருத்தங்களை அரசு

கொண்டுவரவும் இக்குழு பரிந்துரைக்கிறது.

ஊ. மின்சார வாரியம் விளக்குகள் அமைக்கும்போது ஊராட்சி சொத்துக்களில் கம்பங்கள் நட ஊராட்சியின் முன்அனுமதி பெறுவதில்லை. ஆனால் பிற்காலத்தில் சாலைகள் அகலப்படுத்தல் போன்ற வளர்ச்சி பணிகளுக்கு கூட கம்பங்கள் மாற்ற மின்சார வாரியம் தீர்வை விதிக்கிறது. இதுபோன்ற வளர்ச்சி பணிகளை முன்னிட்டு கம்பங்கள் மாற்ற நேரிட்டால் இதுபோன்ற தீர்வை விதிக்காமல் வாரியம் மாற்றிதர உரிய ஆணை பிறப்பிக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

எ. வீடுகளுக்கு மின் இணைப்பு தர மின்சாரவாரியம் கிராம அதிகாரியின் சான்றிதழை வலியுறுத்துவதை தவிர்த்து ஊராட்சியின் சான்றிதழ் அடிப்படையில் மின்இணைப்பு தர உரிய அரசு ஆணை வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

ஏ. அபயாகரமான தொழில் மீதான உரிம கட்டணம் வசூலிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாற்றி ஊராட்சிகளுக்கு வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

ஐ. ஊராட்சி ஒன்றியங்களிலும் மாவட்ட ஊராட்சியுலும் பல்வேறு குழுக்கள், அமைத்து செயல்பட உரிய வழிவகை ஏற்படுத்தப்பட்டு உள்ளது, ஆனால் பல்வேறு பணிகளை செய்துவரும் ஊராட்சிகளில் இதுபோன்ற குழுக்கள் அமைக்க விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை, எனவே குடிநீர், சுகாதாரம், சம்பந்தமான குழு, உணவு மற்றும் பொதுவிநியோகம் சம்பந்தமான குழு, திட்டப்பணிகள் சம்பந்தமான குழு போன்று ஐந்து குழுக்களுக்கு மிகாமல் ஊராட்சிகள் அமைத்து செயல்பட விதிகள் ஏற்படுத்த குழு பரிந்துரை செய்கிறது.

ஒ. குழு நிதி பகிர்ந்தளிப்பது பற்றி விவாதிக்கும்போது உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டுமென் கருதுகிறது. எனினும் சில உறுப்பினர்கள் மாநில அரசு அதன் மொத்த நிதியில் 29-33% பகிர்ந்தளிக்க வேண்டுமென கருத்து தெரிவித்தனர். தற்போது கல்வி, சுகாதாரம், கால்நடை, விவசாயம், உள்ளாட்சி பணியாளர் செலவினம் என பெரும்பகுதி செலவினத்தை அரசே நேரடியாக ஏற்றுக் கொண்டாலும் மொத்த மாநில வருவாயில் 80% க்கு மேல் உள்ளாட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பது நல்ல முறை என்று குழு கருதுகிறது. எனினும் இதுபோன்ற நிதி பகிர்மானம் பற்றிய பரிந்துரை மாநில நிதி குழுவின் அதிகார வரம்பிற்குட்பட்டது என்பதை கருத்தில் கொண்டு இதை அடுத்த மாநில நிதி குழு ஆய்ந்து பரிசீலிக்க வேண்டுமென இக்குழு கருதுகிறது.

(7). வரிசை எண்.19ல் 'அதிக' மற்றும் 'நேரடியாக' என்ற வார்த்தையை நீக்கலாம்.

(8). வரிசை எண். 20ஐ நீக்கம் செய்யலாம்.

(9). வரிசை எண்.25ல் 'சென்னை' என்ற வார்த்தையை நீக்கலாம்.

<u>உ. மாவட்ட திட்டக்குழு</u>

உ.(1). வரிசை எண்.26ல் இறுதியில் உள்ள வாக்கியங்களை வரிசை எண்.44ல் சேர்க்கலாம். இந்த பத்தியில் 'மாவட்ட ஊரகவளர்ச்சி முகமைக்கு' மாவட்ட ஊராட்சி தலைவரை தலைவராக நியமிக்கலாம் என்ற மூன்று உறுப்பினர்களின் தெரிவித்து பெரும்பாலான உறுப்பினர்களின் முடிவு படி தற்போதைய நிலையை தொடரலாம் என குறிப்பிடலாம்.

உ(2). வரிசை எண்.28ல் ' மாநில வளர்ச்சி குழுமத்தில்' சில சட்டமன்ற உறுப்பினர்களையும் , சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்க்கலாம்.

உ(3). வரிசை எண்.29ஐ தொடர்ந்து நிதி பங்கீட்டை 29 முதல் 33 சதவீகிதமாக உயர்த்துவது குறித்து இரண்டு உறுப்பினர்கள் கூறிய கருத்தை தெரிவித்து கல்வி, பொருளாதாரம் போன்ற துறைகளின் நிர்வாக செலவை அரசே நேரடியாக எடுத்துக் கொள்வது பற்றி அதற்கு மேல் 8 சதவிதத்திற்கு மேல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பங்கீட்டில் தற்போதைய நிலை தொடரவும், இப்பிரச்சினையில் மாநில நிதி குழு அதிகார வரம்பிற்குட்பட்டு அடுத்து வரும் குழு இது பற்றி பரிசீலிக்கும் என்ற குழுவின் கருத்தை விவாதிக்கலாம்.

ஊ. இதர பரிந்துரைகள்.

ஊ(1). வரிசை எண்.30ல் தேர்தல் நடத்தும் முறையை முடிவு செய்யும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்க மத்திய அரசை வலியுறுத்தும் என்ற கருத்தை இத்துடன் சேர்க்கலாம்.

ஊ(2). வரிசை எண்.32 ல் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரும் போது கட்சித் தாவல் சட்டம் கொண்டு வராவிட்டால் இது தவறான வழிமுறைக்கு வழிகோலும் என்ற திரு.இராமகிருஷ்ணன் அவர்களின் கருத்தை சேர்க்கலாம்.

ஊ(3). வரிசை எண்.33ஐ நீக்கலாம்.

ஊ(4). வரிசை எண்.40ல் 'உள்ளாட்சி உட்பட்ட புறப்போக்கு' என்று மட்டும் குறிப்பிடலாம், அதற்கு தேவையான சட்ட திருத்தத்திற்கு வழிவகைகளை செய்யலாம்.

II திட்ட நடைமுறை சார்ந்த பரிந்துரைகள்.

(1). வரிசை எண்.49ல் கிராமங்களில் நடைபெறும் திட்டங்கள் மதிப்பிட செயல்படுத்தும் வழிமுறைகள் பற்றிய விவரங்களை அனைத்து ஊராட்சிகளிலும் தகவல் பலகை வைக்க வேண்டும் என்ற கருத்தை சேர்க்கலாம்.

(2). வரிசை எண்.52ஐ வரிசை எண்.50ன் இறுதியில் சேர்க்கலாம்.

இயல்III

வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்களான வேளாண்மை.

கிராம ஊராட்சிகள்.

(1). வரிசை எண்.9ல் 'முன்பணம் வழங்கலாம்' என்பதை ' முன்பணம் வழங்க ஊராட்சி மன்றங்கள் பரிந்துரைக்கலாம்' என மாற்றலாம்.

ஊராட்சி ஒன்றியங்கள்.

(1).வரிசை எண்.8ல் 'ஊராட்சியின் பரிந்துரையின் அடிப்படையில்' என்று சேர்க்கலாம்.

(2). வரிசை எண்.10 மற்றும் 11ல் 'ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்யலாம்' என்று சேர்க்கலாம்.

2. நில சீர்திருத்தம், நில உச்சரம்பு செயற்படுத்துதல்.

கிராம ஊராட்சிகள்.

(1) வரிசை எண்.4-க்கு பிறகு 5வது இனமாக புறம்போக்கு நிலங்கள் தனியாரிடம் இருக்கும் பட்சத்தில் அது பொது பயனீட்டிற்கு பயன்படாத நிலமாக இருந்தால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அதனை பிரித்து கொடுக்க கிராம ஊராட்சிகள் சிபாரிசு செய்யலாம்.

3. சமூக காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்.

கிராம ஊராட்சிகள்

(1). வரிசை எண்.5க்கு பிறகு 6வது இனமாக வெளிநாட்டு உதவி மற்றும் மத்திய மாநில நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் காடுகள் வளர்ப்பு திட்டத்தை செயலாக்கும்போது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அடங்கிய குழு திட்ட செயல்பாட்டை கண்காணிக்கும் குழுவாக செயல்பட உரிய வழிவகைகள் செய்யப்பட வேண்டுமென குழு பரிந்தரைக்கிறது.

4. கல்வி, தொடக்க கல்வி மற்றும் ஆரம்ப கல்வி

கிராம ஊராட்சிகள்.

(1) வரிசை எண்.7 மற்றும் 15ஐ நீக்கலாம்.

5. நூலகங்கள்

கிராம ஊராட்சிகள்

(1) வரிசை எண்.4க்கு பிறகு கீழ்கண்ட இனங்களை சேர்க்கலாம். கிராமங்களில் உள்ள கிளை நூலகங்களை சரியாக பயன்படுத்த வாசகர் வட்டம் மற்றும் நூல் அறிமுக கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

6. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்.

ஊராட்சி ஒன்றியங்கள்

(1). வரிசை எண். 4 மற்றும் 6ஐ நீக்கலாம்.

மாவட்ட ஊராட்சிகள்.

(1). சமுதாய மற்றும் வழிப்பாடுகள் சார்ந்த விழாக்களில் போன்ற வார்த்தைகளை நீக்கலாம்.

7. மருத்துவமனைகள் , ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள்.

கிராம ஊராட்சிகள்.

(1). வரிசை எண்.14ல் 'பொதுமக்கள்' என்பதனை நீக்கம் செய்யவும், பிறப்பு, இறப்பு விவரங்களை பதிவு செய்யும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு வழங்கவும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை கிராம ஊராட்சிகள் வழங்கவும் பரிந்துரையை மாற்றி அமைக்கலாம்.

8. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின்நலிந்தோர் நலன்.

மாவட்ட ஊராட்சிகள்

(1) வரிசை எண்.8ல் 'நாகரீகம் குறைந்த ' என்பதனை மாற்றி 'சமூக முன்னேற்றமடையாத ' என திருத்தலாம்.